


கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்ற தொகுதி ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மங்களூரில் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் சுபா. சந்திரசேகர் ஒன்றிய செயலாளர்கள் பட்டூர் வீர. அமிர்தலிங்கம், அடரி. த. சின்னசாமி பா. செங்குட்டுவன் திட்டக்குடி நகர கழக செயலாளர் வி.பி.பி. பரமகுரு மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ஊரக வளர்ச்சி துறை மற்றும் தமிழ்நாடு மேம்பாட்டு துறை சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக பல்வேறு திட்டங்களை துவக்கி வைத்தார் விழுப்புரம் மாவட்டத்தில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ விழுப்புரம் சட்டக்கல்லூரி அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகளிர் மேம்பாட்டு துறையின் சார்பில் பல்வேறு நல திட்டங்களை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கினார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஷேக் அப்துல் ரகுமான் செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் கே எஸ் மஸ்தான் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் ஏ சிவா மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன். கூடுதல் ஆட்சியர் திருமதி பத்மஜா மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் ஷீலா சேரன் நகர மன்ற தலைவி தமிழ்ச்செல்வி பிரபு மற்றும் அரசு துறை அதிகாரிகள் இருந்தனர்.

## வடலூர் - பார்வதிபுரத்தில்

# ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தாருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

கடலூர், ஜூன் 16-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், பார்வதிபுரம் கிராமத்திலுள்ள ஏரியில் மூழ்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி அறிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வடலூர், பார்வதிபுரம் கிராமம், சவேரியார் நகரைச் சேர்ந்த வின்சென்ட் அமல்ராஜ் அந்தோணி என்பவரின் மகன் அப்டியல் டெவின் ரோஜர் (வயது 17) என்பவர் நேற்று முன்தினம் (14.6.2025) மாலை சுமார் 5.00 மணியளவில் பார்வதிபுரம் கிராமத்திலுள்ள வெங்கலத்து ஏரியில் நண்பர்களுடன் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தர விட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## கே.சீதாராமன் தலைமை! வேலூர் மாவட்டம் - கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் - முன்னாள் பெருந்தலைவர்

# துரை சாம்பசிவம் 10 ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்!

### டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. - கவிக்கோ அப்துல் காதர் அஞ்சலி!

வேலூர், ஜூன் 16-

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மேற்கு ஒன்றியம் பெருமாங்குப்பத்து பெரியவர் முன்னாள் பெருந்தலைவர் துரை சாம்பசிவம் அவர்களின் 10ம் ஆண்டு நினைவேந்தல் புகழஞ்சலி கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் கே. சீதாராமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தை மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை செயலாளரும் முரசொலி தமிழ்மன்ற நிறுவனருமான கே.வி.குப்பம் சி.கோபி ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்விற்கு, கே.வி.குப்பம் மத்திய, கிழக்கு, ஒன்றிய கழக செயலாளர்களான லோ. இரவிச்சந்திரன் (ஒன்றிய குழுத் தலைவர்), இரா.முருகேசன், ஒன்றிய அவைத்தலைவர் இரா.தாமோதரன் ஆகியோர் முன்னிலை வகிக்க அய்யா துரைசாம்பசிவம் அவர்களின் மூத்த மகன், தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த் துறை தலைவர் முனைவர் சா.உதயசூரியன் அனைவரையும் வரவேற்றார்.

அய்யா.துரை சாம்பசிவம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. மாநில ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தலைவர் து.மு.கதிர் ஆனந்த் எம்.பி. மாலை அணிவித்து மலர் தூவி வீர வணக்கம் செலுத்தினார். இவருடன் கலைமாமணி, கவி யருவி, பேராசியர்,கவிக்கோ. அப்துல்காதர் கலந்து கொண்டு நினைவேந்தல் மற்றும் புகழுஞ்சலி செலுத்தி உரை நிகழ்த்தினார். இவர்களுடன், மாநில திராவிட நட்புக் கழக துணை தலைவர் சிங்கரா யர், திராவிட கழக மாவட்ட காப்பாளர் வி.சட கோபன், தலைமை செயற்குழு உறுப்பினர் வே.கு.ரா. சுந்தரவடிவேலு, பொதுக்குழு உறுப்பினர் க.தயாளமூர்த்தி, மு. ஒன்றிய செயலாளர் வ. த.ஜெயக்குமார் ஒன்றிய அவைத்தலைவர் மு . அ சே ா க் கு ம ா ர் (மாவட்ட கவுன்சிலர் ) வெ.ஜெயராஜ், பாரதி வெங்டேசன், கட்டுகல் பாஸ்கர், வ.எத்திராசன் பா.சிவகாமி, முடினாம் பட்டு கு.குப்பன் மரு. கோவி தூயவன், கவுன்சிலர்கள் டி.இரவி.வேலு, உதய சூரியன், பாரதி, மாரி.சிவக்குமார், ச.சிவக்குமார், சே.வண்டை, சத்யா, எஸ். டி ரகு, பிரடிசி முருகேசன், ஜெயச்சந்திரன், விஜயன், கவசம்பட்டு வேல்முருகன், மு.பட்டு சிதம்பரம் இரா. சந்திரன் மு. பிரபு, சே. கபில்தேவ், ஒன்றிய இளைஞானி அமைப்பாளர் சே.மோகன், து. அமைப்பாளர்கள், ஏவிஎம் பிரபு, மாணவரணி சி.ரஞ்சித் குமார், அரங்கண்ணல், பொதிகைவளவன், இளங்கோவன், இ அணி து. அமைப்பாளர்கள் ச.நா. சாமுவேல், ஷியாம். தகவல் தொழில் நுட்ப அணி இரா.முரளி, கா.சுரேஷ ஆசிரியர் இரவிச்சந்திரன், வெ.ஜெ.விவேக நந்தன், பெருமாங்குப்பம் அ.சிற்றரசு, ம. அன்பரசு, தென்னரசு, முருகன் சகா.குட்டி, ஆகியோர் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த அய்யாவின் மனைவி அரங்கநாயகி, மகன்கள் முனைவர் சா.உதயசூரியன்,முனைவர் சா.முத்தழகு, வேளாண் சா.உதயசந்திரன். கல்வியாளர் சா. பரிமளம், சா.அல்லி (மகள்), சமூக செயல்பாட்டாளர் சா.குமரன், பல் மருத்துவ நிபுணர் சா. அகத்தியன் மற்றும் குடும்ப உறவினர்கள், புகழஞ்சலி உரைகளை ஏற்றனர்.

முடிவில், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சா. பரிமளம் நன்றி கூறினார். இந்த நிகழ்வினை, இந்த குடும்ப உறவினர்களோடு இணைந்து கே. வி.குப்பம் முரசொலி தமிழ் மன்றம் ஏற்பாடு செய்தது.

# அரியலூர் எஸ்.சிவசுப்பிரமணியன் 6 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சி!

## அரியலூர், பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினர் புகழஞ்சலி செலுத்தினர்!

அரியலூர், ஜூன் 16-

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள தேவனூர் கிராமத்தில் முன்னாள் பெரம்பலூர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், மாநிலங்களவை முன்னாள் உறுப்பினர் எஸ்.சிவசுப்ரமணியன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர், ஆலத்தூர் ஒன்றிய கழக செயலாளர் என்.கிருஷ்ண மூர்த்தி,

கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், சிவராஜேஸ்வரி சிவசுப்ரமணியன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன் ஆகியோர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்தார்கள்.

இந்நினைவு நிகழ்ச்சியில் எஸ்.எஸ்.சிவகுமார், மாநில ஆதிதிராவிடர் துணை அமைப்பாளர் ப.துரைசாமி, மாவட்ட மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சந்திரசேகர், லதா பாலு, அரியலூர் மாவட்ட ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இ ர ா . ம ணி ம ா ற ன் , ரெ.அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், மா.அன்பழகன், ஆர். கலியபெருமாள், வி.எழில் மாறன், தனவேல், தெய்வ. இளையராஜா, பொன். செல்வம், நா.கணேசன், இரா.அண்ணாதுரை, இ.பி. ஆர் . செ ந் தி ல் கு ம ா ர் , அருண், பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர்கள் மதியழகன், சி.ராஜேந்திரன்,

நகர கழக செயலாளர்கள் வெ.கொ.கருணாநிதி,

இரா.முருகேசன்,பேரூர் கழக செயலாளர்கள் ப. கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு, ஆர்.எம்.அன்பழகன், வி. எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட அமைப்பாளர்கள் கே.சி.லூயி கதிரவன்,

எஸ்.ஆர்.இராமராஜன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், தங்கை.எழில் மாறன், விஜயலட்சுமி செல்வராஜ், பானுமதி இராஜேந்திரன், மீனா சாமிநாதன், ஒன்றிய துணை செயலாளர் காளமேகம், தலைமை கழக பேச்சாளர்கள் கவிஞர் வீரமுரசு, இளஞ்செழியன், பழ.புனிதம், கழக வழக்கறிஞர்கள் செல்ல.மணிமாறன், எம்.ராஜா, முத்தமிழ் செல்வன்,

ஆ.கதிரவன், மோகன் ராஜ், ஆ.சசிகுமார், கதிரவன், பாலா,முன்னாள் நகர மாணவரணி அமைப்பாளர் இரா.சுர்ஜித்,முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், நகர இளைஞரணி அமைப்பாளர் ச.விக்னேஷ். தோ.மு.ச. நிர்வாகிகள் டி.சேகர், பி.வி. அன்பழகன், கொளஞ்சி, ஹென்றி, குமார்,செல்வம், கணேசன்,பட்டுசெல்வம், சுப்ரமணியன், கழக நிர்வாகிகள் இராஜமாணிக்கம், ஞானபிரகாசம், முரசொலி குமார், வீ.கொளஞ்சியப்பா, கு.பிரபாகரன், மா.செ.செந்தில்குமார்,

அறிவழகன், பாலா, செந்தில்குமார், செல்வகுமார், கருணாநிதி, செல்வகுமார், ஆசை.அன்பு, ராமராஜன், ரமணி, ஆனந்த், நடராஜன்,குமரவேல், வெற்றிவேலன், இதயத்துல்லா, காசிநாதன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு முன்னாள் எம்.பி. எஸ். சிவசுப்பிர மணியன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, மலர்தூவி புகழஞ்சலி செலுத்தினார்கள்.

## திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

# தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் க.தங்கராஜ் அவர்கள், உடல்நலக் குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வரும் காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற பி.சி.தங்கம், (நீலாக்கவுண்டன்பட்டி, கள்ளிமந்தயம், திண்டுக்கல் மாவட்டம்) அவர்கள் தொப்பம்பட்டி வடக்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.06.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றியம் வடுகப்பட்டியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வள்ளலார் ஆசிரமத்தில் சரவணக்குமார் எம் எல் ஏ. மதிய உணவு வழங்கினார். உடன் வடக்கு ஒன்றிய செயலாளர் எல் ம் பாண்டியன். மாவட்ட அவை தலைவர் பிடி செல்ல பாண்டியன். பேரூராட்சி தலைவர் நடேசன். பேரூர் செயலாளர் தமிழன்.மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்



தேனி வடக்கு மாவட்டம் மார்க்கையன்கோட்டை பேரூராட்சி பகுதி முத்துச்சாமி புரத்தில்பகுதிநேர ரேஷன் கடையை வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன்எம்பி. திறந்து வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர் கன்னியப்பட்டி முருகேசன் பேரூர் செயலாளர் முருகன்பேரூர் துணை செயலாளர் காமராஜ். தேனி வடக்கு மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் மகேந்திரன். மாவட்ட பிரதிநிதி சுருளி. பழனிவேல். ராஜன்.மாவட்ட தொழிலாளர் அணிதுணை அமைப்பாளர் சிங்கராஜ் கவுன்சிலர் ஐயப்பன் ஜெயந்தி மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல் மேற்கு மாவட்டம்

# பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்! வேட்பு மனுத் தாக்கல்

### தலைமைக் கழக அறிவிப்பு!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் திண்டுக்கல் மேற்கு மாவட்டக் கழகத் தேர்தலில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்.ஆர். கே.பாலு அவர்கள் ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றியப் பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். கழக சட்டதிட்ட விதிகளின்படி, 'ஒருவருக்கு ஒரு பொறுப்பு' என்ற அடிப்படையில், எஸ்.ஆர்.கே.பாலு அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்;

திண்டுக்கல் மேற்கு மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, ஜீன் 20 (வெள்ளிக்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/- வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 14.06.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.




விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்ற தொகுதி, கிளியனூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ச.புஷ்பராஜ் அவர்களின் ஒன்றிய அலுவலகத்தை திறந்து வைத்தார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றிய குழு பெருந்தலைவர் உஷா முரளி, ஆர்.எஸ்.வாசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து, மு.ஒன்றிய குழு பெருந்தலைவர் வி.எம்.ஆர். சிவா, மாவட்ட பிரதிநிதிகள் தனபால்ராஜ், சிவக்குமார், மாவட்ட கவுன்சிலர் கௌதமன், ஒன்றிய துணை செயலாளர் அழகேசன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி தலைவர் G.வேலு, மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் திராவிடமணி மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.